## February 5, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மியான்மரில் ராணுவம், பொது நிர்வாகம் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்துக் கண்காணிக்க, 'யூனியன் ஆலோசனைக் கவுன்சில்' எனும் புதிய உயரிய அதிகார அமைப்பை உருவாக்க அந்நாட்டு ராணுவ ஆட்சிக்குழு திட்டமிட்டுள்ளது.

(i) மியான்மரில் அண்மையில் தேர்தல் நடந்து முடிந்த நிலையில், புதிய நாடாளுமன்றம் அடுத்த மாதம் கூடுகிறது. இந்நிலையில், நாட்டின் நிர்வாகம், சட்டம், நீதித்துறை ஆகிய மூன்றையும்விட கூடுதல் அதிகாரம் கொண்ட அமைப்பாக இப்புதிய கவுன்சில் இருக்கும்.

(ii) இதன்மூலம், ராணுவத் தளபதி மின் ஆங் லயிங் அதிபராகப் பதவியேற்றாலும், ராணுவத்தின் மீதான தனது பிடியைத் தக்கவைத்துக் கொள்வார்.

(iii) 5 பேர் கொண்ட இக்குழு, தேச பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்றத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் முழுமையாகக் கண்காணிக்கும். அதாவது, பொது நிர்வாகத்தைத் தனது நிழல் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கும் அதேநேரத்தில், புதிய ராணுவத் தளபதிக்கு அதிக அதிகாரம் செல்வதைத் தடுப்பதற்கு மின் ஆங் லயிங் இம்முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

2. அணுசக்திக் குறைப்பு தொடர்பாக ஈரான்- அமெரிக்கா இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை, ஓமன் நாட்டில் நடைபெறவுள்ளது.

(i) இப்பேச்சுவார்த்தையில் அமெரிக்கா தரப்பில் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மரு மகன் ஜாரெட் குஷ்னர், சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் உள்ளிட்டோரும், ஈரான் தரப்பில் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி உள்ளிட்டோரும் கலந்துகொள்வார்கள் எனத் தெரிகிறது.

(ii) பிராந்திய அமைதியைக் கருத்தில் கொண்டு சவூதி அரேபியா, கத்தார் போன்ற நாடுகளும் இப்பேச்சுவார்த்தையில் ஆர்வம் காட்டிய நிலையில், மறைமுகப் பேச்சுவார்த்தையை வலியுறுத்தி வந்த ஈரான் தற்போது நேரடிப் பேச்சுவார்த்தைக்கே சம்மதித்துள்ளது.

(iii) முதலில், இந்தப் பேச்சுவார்த்தை துருக்கியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. அப்போது, ஈரானின் ஏவுகணைத் திட்டம் மற்றும் அந்நாடு ஆதரிக்கும் கிளர்ச்சிக் குழுக்கள் குறித்தும் விவாதிக்க வேண்டும் என அமெரிக்கா நிபந்தனை விதித்தது. இதற்கு ஈரான் கடும் எதிர்ப்புதெரிவித்தது.

(iv) இதையடுத்து, பேச்சுவார்த்தை நடக்கும் இடத்தை ஓமனுக்கு மாற்ற வேண்டும் என்ற ஈரானின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இதற்கு முன்னரும் ஈரான்-அமெரிக்கா இடையிலான பேச்சு வார்த்தைகளை ஓமன் பல முறை முன்னின்று நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

3. 2031 ஆசியான் கோப்பை கால்பந்து போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை பெறும் பந்தயத்தில் இந்தியாவும் இணைந்துள்ளது. ஏற்கெனவே, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, தென் கொரியா, குவைத் ஆகியவையும், கிர்ஜிஸ்தான் - தஜிகிஸ்தான் - உஸ்பெகிஸ்தான் கூட்டாகவும் அந்த வாய்ப்புக்கான போட்டியில் உள்ளன.

4.தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் மகளிருக்கான 48 கிலோ பிரிவில் மீரா பாய் சானு, மொத்தமாக 205 கிலோ எடையைத் தூக்கி சாம்பியன் ஆனார். ஸ்னாட்ச் (89 கிலோ), கிளீன் & ஜெர்க் (116 கிலோ), மொத்தமாக என 3 பிரிவுகளிலுமே அவர் தூக்கிய எடை புதிய தேசிய சாதனையாகும்.

5. தில்லி மற்றும் நேபாளத்தின் பெனி நகரம் இடையே நேரடி பேருந்து சேவை தொடங்கப்பட்டது.

(i) நேபாளத்தில் புகழ்பெற்ற ஏராளமான ஹிந்து கோயில்கள், புத்தமத கோயில்கள் உள்ளன. அதில் ஹிந்துக்கள், புத்தமதத்தினரால் சேர்ந்து வழிபடப்படும் முக்திநாத் கோயிலும் ஒன்றாகும். அக்கோயிலுக்கு செல்லும் நுழைவு வாயில் பகுதியாக நேபாளத்தின் காண்டகி மாகாணத்தில் உள்ள பெனி நகரம் கருதப்படுகிறது.

(ii) பெனிக்கும், தில்லிக்கும் இடையே நேரடி பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த பேருந்து சேவைக்கு நேபாள- இந்தியா நட்புறவு பேருந்து சேவை என பெயரிடப்பட்டுள்ளது. அந்த பேருந்து, பெனியில் இருந்து புறப்பட்டு சியாங்ஜா, வாலிங், பைரஹாவா, அயோத்தி, ஆக்ரா வழியாக தில்லி வந்தடையும். அதே வழிதடத்தில் நேபாளத்திற்கு மீண்டும் இயக்கப்படும்.

(iii) தற்போது வரை முக்திநாத் கோயிலுக்கு இந்தியாவில் இருந்து நேரடியாக செல்லும் வசதி கிடையாது. காத்மாண்டுக்கு விமானத்தில் சென்று அங்கிருந்து பொஹாரா மற்றும் ஜாம்சோமுக்கு வேறு விமானத்தில் செல்ல வேண்டும். இதையடுத்து அங்கிருந்து முக்திநாத் கோயிலுக்கு ஜீப்பில் செல்ல வேண்டும். இந்த பேருந்து சேவையால், பயண நேரம் குறைவதுடன் செலவும் கம்மியாகும்.

(iv) தில்லியில் இருந்து பெனி நகரம் 1,400 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அங்கு பேருந்தில் செல்ல 27 மணி நேரம் ஆகும். தில்லியில் இருந்து தினமும் மாலை 4 மணிக்கும், பெனியில் இருந்து காலை 6.45 மணிக்கும் பேருந்து புறப்படும்.

(v) பேருந்து கட்டணமாக நேபாள பணத்தில் ரூ.5,400, இந்திய பணத்தில் ரூ.3,200 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(vi) கடல் மட்டத்தில் இருந்து 3,710 அடி உயரத்தில் முக்திநாத் கோயில் உள்ளது. நேபாளம் செல்ல இந்தியர்களுக்கு பாஸ்போர்ட் தேவையில்லை. உரிய அடையாள ஆவணம் வைத்திருந்தால் போதும்.

6.பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி 7,8-தேதிகளில் மலேசியாவுக்குப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். பிரதமராகப் பதவியேற்ற பிறகு அவர் மலேசியாவுக்குச் செல்வது இது மூன்றாவது முறையாகும்.

(i) இந்தப் பயணத்தின்போது மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை பிரதமர் மோடி சந்தித்துப் பேசுகிறார். அப்போது இருதரப்பு வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கடல்சார் பாதுகாப்பு, நிதித் தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி, கலாசாரம், சுற்றுலா உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட இருக்கிறது.

(ii) பிரதமரின் இந்தப் பயணத்தின்போது 10-ஆவது இந்திய-மலேசிய தலைமைச் செயல் அதிகாரிகள் (சிஇஓ) கூட்டமைப்பின் மாநாடும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மலேசியாவில் சுமார் 29 லட்சம் இந்திய வம்சாவளியினர் உள்ளனர். இந்திய வம்சாவளியினர் அதிகம் வாழும் நாடுகளில் சர்வதேச அளவில் மலேசியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

(iii) இரு நாடுகளிடையே நீண்டகால நட்புறவு, வரலாறு, கலாசாரம், நாகரிகரீதியாக நீண்ட வரலாற்றுத் தொடர்புகள் உள்ளன. இரு நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதன் மூலம் பரஸ்பரம் பயன்பெறும் வகையில் தொடர்ந்து இணைந்து செயல்படுவதற்கு உதவும் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

7. உலக புற்றுநோய் தினம் - பிப்ரவரி 4

8. வனப்பரப்பின் தற்போதைய நிலை

- தேசிய கொள்கை இலக்கு: தேசிய வனக் கொள்கையின்படி, ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 33% காடுகளால் சூழப்பட்டிருக்க வேண்டும்.
- இந்திய வன ஆய்வின் தரவுகளின்படி, இந்தியாவின் தற்போதைய வனப்பரப்பு வெறும் 21.71% மட்டுமே.

(i) ஆபத்தான உயிர் பிழைப்பு விகிதங்கள்

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிக்கை ஒன்று, பல்வேறு திட்டங்களின் கீழ் நடப்படும் மரக்கன்றுகளில் 30% முதல் 40% மட்டுமே உண்மையில் உயிர் பிழைக்கின்றன என்று தெரிவிக்கிறது.
- உண்மையான உயிர்வாழும் விகிதம் பெரும்பாலும் 10%-க்கும் குறைவாகவே உள்ளது, அதாவது பெரும்பாலான மரக்கன்றுகள் மரங்களாக வளர்வதே இல்லை.
- ஆண்டுதோறும் மில்லியன் கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்ட போதிலும், கோடை காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் தொடர்ந்து அதீத ஆழத்திற்குச் சென்று வற்றிவிடுகிறது.

(ii) மரம் நடும் "புகைப்பட விழா" விழாக்கள் மீதான விமர்சனம்

- மரம் நடுவது ஒரு முக்கிய வாழ்வியல் கடமையிலிருந்து, சமூக ஊடகங்கள் மற்றும் விளம்பரங்களுக்கான வெறும் "புகைப்பட விழா" வாக மாறிவிட்டது.
- பல பொது விழாக்களில், மேடைகள், பதாகைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கான செலவு, நடப்படும் மரக்கன்றுகளின் உண்மையான விலையை விட ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமாக உள்ளது.
- முக்கிய விருந்தினர்கள் சென்ற உடனேயே மரக்கன்றுகள் பெரும்பாலும் கைவிடப்படுகின்றன; அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்கோ அல்லது கால்நடைகளிடமிருந்து பாதுகாப்பதற்கோ எந்த ஏற்பாடுகளும் செய்யப்படுவதில்லை.

(iii) குறியீட்டு நடவு முறைக்கு அப்பால் செல்ல, பின்வரும் சீர்திருத்தங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன:

- மரம் நடுதலுக்காக ஒதுக்கப்படும் வரவுசெலவுத் திட்டத்தில் குறைந்தபட்சம் 50% பராமரிப்புக்காகவே (தண்ணீர் ஊற்றுதல் மற்றும் வேலி அமைத்தல்) ஒதுக்கப்பட வேண்டும்.
- அரசுத் துறைகள், நடப்பட்ட மரக்கன்றுகளின் ஆரம்ப எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லாமல், ஒரு வருடத்திற்குப் பிறகு உயிர் பிழைத்த மரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும்.
- மரக்கன்றுகளைக் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்குப் பராமரிப்பதை அந்தந்தத் துறைகளுக்கு ஒரு சட்டப்பூர்வக் கடமையாக்க வேண்டும்.
- ஆலமரம், அரசமரம், வேம்பு மற்றும் புங்கமரம் போன்ற உள்ளூர் மண்ணுக்கு ஏற்ற, அந்தந்தப் பகுதிக்குரிய மர வகைகளை மட்டுமே நடுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

(iv) தொழில்நுட்பம் மற்றும் சமூகத்தின் பங்கேற்பு

- டிஜிட்டல் கண்காணிப்பு: ஒவ்வொரு மரக்கன்றின் வளர்ச்சியையும் கண்காணிக்கவும், குறிப்பிட்ட கால இடைவெளியில் புகைப்படங்களைப் பதிவேற்றுவதைக் கட்டாயமாக்கவும் "ஜியோ-டேக்" தொழில்நுட்பம் மற்றும் மொபைல் செயலிகளைப் பயன்படுத்துதல்.
- மரக்கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும், மேலும் தங்கள் பள்ளிப் பருவம் முழுவதும் அவற்றை வெற்றிகரமாகப் பராமரிக்கும் மாணவர்களுக்குச் சிறப்பு மதிப்பெண்கள்/வரவுகள் வழங்கப்பட வேண்டும்.
- உயிர்வாழும் விகிதங்களைச் சரிபார்க்க, மரம் வளர்ப்புத் திட்டங்கள் சமூகத் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- நீண்ட காலப் பராமரிப்பை உறுதி செய்வதற்காக, பராமரிப்புப் பொறுப்பை உள்ளூர் குடியிருப்பு நலச் சங்கங்கள், சிறு வணிகர்கள் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

"பராமரிக்கப்படாத ஆயிரம் மரக்கன்றுகளை விட, நன்கு பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படும் பத்து மரங்கள் மிகவும் மேலானவை